# விசித்திர மனம்

மாசு மருவற்ற முகத்திலே சிவப்புக் கம்மல்கள் ஒளிர, பளிச்சென மைதீட்டிய கண்களும், வெற்றிலை போட்டுச் சிவந்த அழகிய வாயும், சாந்துப்பொட்டும், அந்த முகத்திலே அழகை குலுங்க வைக்க, குழந்தையும் மடியுமாக, இளம் பிள்ளைத்தாச்சியின் முழுச் சோபை இலங்க உட்கார்ந்து கொண்டிருந்தாள் உமா.

"பெண் குழந்தையாமே, உமா? கண்ணம்மா என்றுதானே பெயர் வைத்திருக்கிறாய்? கண்ணனுக்குப் பெண்பால் கண்ணம்மா! அது தானே?" என்றாள் சுந்தரி, அகமும் முகமும் தோழியைக் கண்டு மலர.

தானே ஊகித்துச் சொல்லிவிட்ட பெருமை தனக்கு இருக்கட்டும் என்று நினைத்த சுந்தரி, உமாவின் பதிலுக்குக் காத்திருக்கவில்லை! ஆனால்,

"இது பிறந்தது என்றைக்குத் தெரியுமா, சுந்தரி! சுதந்திரத் திருநாளன்று. விடியற்காலையாக்கும்! பெயர் ஸ்வராஜ்யலக்ஷ்மி!" என்று பதிலளித்தாள் உமா, மடியிலிருந்த குழந்தையை அருமையுடன் ஒரு தடவை நெருங்க அணைத்துக்கொண்டு.

சுந்தரிக்கு ஏற்பட்டது ஏமாற்றமல்ல. வியப்பும், மகிழ்ச்சியுமே உண்டாயின. "அடடே! பேஷான பெயர், உமா! வெள்ளிக்கிழமையும், ஸ்வராஜ்யம் வந்த தினமும் இது பிறந்த நாளாக இருப்பதற்கு இந்தப் பெயர் ரொம்பப் பொருத்தம்! நம்ம நாட்டுக்கு லக்ஷ்மீ கடாக்ஷம்தானே, சுதந்திரம் வந்ததனாலே! சுதந்திரதேவி என்று சொல்வதைவிட ஸ்வராஜ்ய லக்ஷ்மீ என்பது ரொம்பப் பொருந்தும்! எனக்கு ரொம்பப் பிடித்திருக்கு இந்தப் பெயர்! இது யார் யோசனை?- அவர் யோசனையா?" என்று ஆவலுடன் கேட்டாள் சுந்தரி.

"இல்லை, என் யோசனைதான்! சுதந்திரத் திருநாளுக்கு முதல்நாள் நோவு கண்டபோதே 'பெண் பிறந்தால் அழகாக ஸ்வராஜ்ய லக்ஷ்மி என்று பெயர் வைக்கலாமே!' என்று நினைத்தேன்; என் ஆசை பலித்தது! அவர் புண்ணியாவசனத்துக்கு வரும்பொழுது 'முத்துலக்ஷ்மி' என்று தன் தாயார் பெயரை வைக்கணும் என்று எண்ணிக் கொண்டு வந்திருந்தார். 'அம்மா பெயரில் 'லக்ஷ்மி' இதிலே இருக்கிறதே, இதை வைக்கலாமே, நல்ல பொருத்தமான பெயர்!' என்றேன். மறுபேச்சில்லை, ஒப்புக்கொண்டுவிட்டார்; இதன் அதிர்ஷ்டம்!" என்று கூறினாள் உமா, குழந்தையின் தலையை அன்புற தடவிக்கொடுத்துக்கொண்டே.

"சந்தேகமென்ன, இது அதிர்ஷ்டக் குழந்தைதான்! எங்கே, கொடு அதை! கண்ணனென்று பெயர் வைக்கணும், பிள்ளை வேணும் என்று எண்ணிக்கொண்டிருந்த உன் மனசை மாற்றிவிட்டு, உன்னை அடக்கிவிட்டுத்தான் பிறந்திருக்குன்னு சொல்லு, இந்தக் குஞ்சு!" என கொஞ்சினாள் சுந்தரி, குழந்தையைத் தாயிடமிருந்து வாங்கிக்கொண்டு.

"இந்த அதிர்ஷ்டசாலியை எடுத்துக்கொள்ளுகிற வேளை, உனக்கு ஒரு குழந்தை பிறக்கட்டும்! உனக்கு பிள்ளையா வேணும், சொல்லடி!" என்றாள் உமா.

"ஐயோம்மா! எனக்குக் குழந்தைகள் வேண்டவே வேண்டாம்! அப்படிப் பிறந்தாலும், பெண்ணே பிறக்கட்டும்! முதல் குழந்தை பெண்ணாக இருந்தால்தான், அதற்கு ஆசை ஆசையாகத் துணிமணிகள் தைத்துப் போடவும், தலைவாரிப் பின்னி சிங்காரிக்கவும் நமக்கு ஆசையாயிருக்கும்! அதுவும் பத்து வயசானால் நமக்குக் கூடமாட ஒத்தாசையாக இருக்கும்; அது வேறே சௌகரியம்!" என்றாள் சுந்தரி.

"குழந்தை வேண்டாம்னு சொல்றவளைப் பாரு! இவ்வளவு கற்பனை பண்ணியிருக்கிற உனக்கா, குழந்தை வேண்டாம்?" என்று கூறி கல கலவென சிரித்தாள் உமா.

"அது கிடக்கட்டும் உமா! நாளைக்கு கோகுலாஷ்டமியாச்சே! போன வருஷம் கோகுலாஷ்டமியிலிருந்துதானே உனக்குக் கண்ணன் வெறி ஏற்பட்டதென்று சொன்னாய்? ஒரே கிருஷ்ணர் மயமாகக் கொலுவை நிரப்பியிருந்தாயே, அப்போது சொல்லவில்லையா நீ? இந்த கோகுலாஷ்டமிக்குள் அடங்கிவிட்டதே, பார்த்தாயா வேடிக்கை!" என்று பேச்சைத் திருப்பும் நோக்கத்துடன் கேட்டாள் சுந்தரி.

"ஓ, ஆமாம், சுந்தரி! எனக்கும் நினைத்துக்கொண்டால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது! அப்போ இருந்த வெறியிலே உன்னிடம் சொல்லியிருக்கிறேன் போலிருக்கு, பிள்ளை பிறந்தால் கண்ணனென்று பெயர் வைக்கலாம், அழகாயிருக்கும் என்று; அதுதான் கேட்டிருக்கிறாய்! இப்போ பார், அந்த வெறி அடங்கித்தான் போச்சு, இது பிறந்ததும்! என்னமோ, மனிதர்களின் மனசும், அதன் போக்கும் விசித்திரம்தான், போயேன்!" என்றாள் உமா; இன்னும் ஏதோ கூற வாயெடுத்தாள், ஆனால் அடக்கிக்கொண்டுவிட்டாள்.

சுந்தரி விடை பெற்றுச் சென்றபின்தான், உமாவுக்கு ஏதேதோ பழைய நினைவுகள் எழுந்தன. சுந்தரி சொன்னதைப் போல நடந்தது வேடிக்கையாக இருக்கிறது இப்போது. ஆனால் இதன் ரூபம் வினையாக இருந்ததுண்டே! 'இந்த மாதிரி மன நிம்மதியுடன் தான் இருக்கமுடியும் மீண்டும்,' என்று அவள் உறுதியுடன் இருந்தாளா சில மாதங்களுக்கு முன்பு? ஏன் இருபது நாளுக்கு முன்புகூடத்தான் அவள் மனதில் திகில் குடிகொண்டிருந்தது!

போன வருஷம் இந்த நாட்களில் தனிப் புதுக் குடித்தனம் துவங்கியிருந்த குதூகலம் நிரம்பியிருந்தது உமாவின் உள்ளத்திலே. ஆடியிலிருந்து ஆரம்பமான பண்டிகை விழாக்கள், பதினெட்டாம் பெருக்கைக் கொணர்ந்து கொண்டே, உமாவின் உள்ளத்தில் சந்தோஷப் பெருக்கையும் கொண்டுவந்தன. தானே, தன் பொறுப்பாக, தன்னகத்திலே பண்டிகைகள் கொண்டாடுவதைப் பற்றிப் பெருமிதங் கொண்டிருந்தாள் உமா.

ஆனால் கோகுலாஷ்டமியன்று அவளுக்கு ஏற்பட்டிருந்த உத்ஸாகமும் உள்ளப் பூரிப்பும், வேறெந்தப் பண்டிகைக்கும் ஏற்படவில்லை. நாலுவித பக்ஷணங்களைச் செய்துகாட்டும் திறனை வெளியிட அது ஏற்ற பண்டிகை என்பதாலா அந்தக் குதூகலம்! . . . ஊஹூம்!

தவழுங்கோலத்திலிருந்த நீல வர்ணக் குழந்தை கண்ணனின் உருவம் அவள் உள்ளத்தில் ஓர் உணர்ச்சிப் பெருக்கை உந்தியது. பூவிலையும், மாவிலையும், வாழைக் கன்றுகளும், இழைகோலங்களும் சூழ்ந்த சிறு மண்டபத்திலே, அந்தக் குழந்தை கண்ணனை அவள் எழுந்தருளச் செய்தபோது அவள் என்ன வேண்டினாள்?

"உன்னை நான் பூஜை செய்யும் வேளை நல்ல வேளையாக இருக்கட்டும். உன்னைப்போல எனக்கொரு . . . "

ஏனோ அவள் மனதில் கண்ணனே, அல்லது கண்ணனைப்போலவே குழந்தை தனக்கு உதிக்க வேண்டும், உதிக்கப்போகிறான் என்ற ஒரு எண்ணம், பிரமை.

குழந்தை வேண்டுமென்று பகிரங்கமாக பூஜையோ, விரதமோ செய்யத் துணியாத உமா, தன் குறையை வெளிகாட்டிக்கொள்ள விரும்பாத உமா, குழந்தைக் கடவுளான கண்ணனை மானஸீகமாகத் தொழுது அவன் அருளைப் பெற விழைந்தாள்! அவளையுமறியாமலே, கண்ணன் பண்டிகைக்குத்தான் அவளுடைய பற்று மிகுந்திருந்தது!

'கண்ணன் பூஜை என்றால் அழகான, ரொம்ப ரொம்ப அழகான கண்ணன் பொம்மை வேண்டும்; அந்த முகத்திலே நல்ல களை, குறும்புச் சிரிப்பு எல்லாம் பிரதிபலிக்க வேண்டும். நிஜக் குழந்தை மாதிரி இருக்க வேண்டும்!' இப்படியெல்லாம் நாட்டம் கொண்டவளாகத்தான் இருந்தாள். முதல்நாள், அடுத்தகத்து மாமா, மாமி துணையுடன் பொம்மைக் கடைக்குப் போய் வந்தாள் உமா.

கடையில் அந்தக் தவழும் அழகிய உருவத்தைப் பார்த்ததும் கையில் வாங்கிக்கொண்டது மட்டுமல்லாமல், இடுப்பிலும் அதை இறுக்கிக்கொண்டு, "மாமி! இது எவ்வளவு அழகு பாருங்களேன்! இதையே வாங்கலாம், நன்றாயிருக்குப் பாருங்களேன்! என்று குதூகலத்தில் துள்ளினாள். பொம்மையைக் கொஞ்சினாள் உமா.

"பார்! குழந்தைகள் இல்லாததனாலே, பாவம், அந்தப் பொம்மைக் குழந்தையைக் கண்டதும் எப்படி சந்தோஷம் ஏற்படுகிறது, அவளுக்கு! அவள் குதூகலத்தைப் பார்!" என்றார் மாமா!

"அதற்கென்ன, இந்தப் பொம்மை வந்த வேளை, ஒரு குழந்தையும் பிறக்கட்டும்!" என்றாள் அந்த மாமி.

"என்ன, மாமி! நிஜமாத்தான் பாருங்களேன், இந்த முகம் நல்ல அழகு இல்லையா மாமி!" என்றாள் உமா. புன்னகையுடன் வீட்டிற்குப் பொம்மையுடன் மீண்ட உமாவின் மனம், அந்தத் தம்பதிகளின் வார்த்தைகளில் உண்மை இருப்பதைப் போல எண்ணலாயிற்று, உண்மை இருக்க வேண்டுமென விரும்பவும் விரும்பியது!

அழகிய கண்ணன் பொம்மையை வீட்டில் கொணர்ந்து வைத்த உமாவுக்கு, கிருஷ்ணன் மீது பாட்டுக்களையே பாட உத்ஸாகம் எழுந்தது விந்தையா?

"கிருஷ்ணா நீ பேகனே பாரோ", என்று உமா பாடிக்கொண்டிருக்கையில், வீடு மீண்ட கணவன் சங்கரன், "அட, பழைய பாட்டா, புது கிருஷ்ணருக்கு!" என்று பரிகாசமாக மொழிந்த பொழுது சிறிது கூச்சம் அடைந்தாள் உமா; ஆனால் நாளடைவிலே மறைந்துவிட்டது கூச்சம். கண்ணன் மீது கீர்த்தனைகளென்ன, பஜனைப் பாடல்கள் என்ன - இவைகளைப் பாடவும், பாடக்கற்கவும் ஒரு வெறி பிறந்தது உமாவுக்கு. ஒரே மாதத்திற்குள், இருபத்தைந்து ரூபாய்க்கு இசைத் தட்டுக்களை வாங்கிக் குவித்துவிட்டாள் அவள்.

"புதுக்குடித்தனம் தொடங்கியிருப்பதற்கு, நல்ல புது 'ரிகார்டுகள் வேண்டாமா? பழசு அலுத்துப்போச்சு. இந்தப் புதுசெல்லாம் ஒண்ணும் நெம்பர் பாட்டுக்கள்!" என்று மனைவி சொன்னதை ஆமோதித்திருந்தான் சங்கரன்.

பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ கிருஷ்ணர் படத்தை கண்டால், உடனே கிழித்தெடுத்து 'ஆல்பமி'லே சேர்த்துவிடலானாள். கிருஷ்ணரின் லீலைகள் எவ்வளவு கணக்கு வழக்கற்றவையோ, அத்தனைவிதக் கோலங்களிலும் அவருடைய படங்கள் உண்டே! அவற்றைப் பொறுக்கிச் சேர்க்க ஆரம்பித்தால், படங்களுக்கா குறைச்சல்?

அவள் காத்திருந்த நவராத்தி நெருங்கி வந்தது. திருவல்லிக்கேணியில் வசிக்கும் சுந்தரியைப் பார்க்கக் கணவனுடன் போய் வந்த அவள், பார்த்தசாரதி சுவாமி ஆலயத்தில் பொம்மைக் கடைகளைப் பார்த்தாள். ஒரு குழந்தையின் உயரத்திற்கு, கம்பீரமாக நிமிர்ந்து நின்று புன்னகை புரியும் 'மாப்பிள்ளை' கிருஷ்ணரைக் கண்ட அவள், ஒரு வினாடி சமைந்து நின்றாள் பொம்மைபோல.

"இது ஒன்றை வாங்கலாம்! பாருங்களேன், என்ன அழகு முகத்திலே!" என்று பொரிந்து போனாள் உமா.

"சோற்றுக்கே லாட்டரி அடிக்கிறார்கள் ஜனங்கள் இந்த நாளிலே! அந்த மண்ணுக்கு, 10,15 என்று ரூபாயைக் கொட்டுவார்களா! அதைக் காப்பாற்றுவதே கஷ்டம்!" என்று சிறிது கடினம் தொனிக்க பதிலுரைத்தான் சங்கரன்.

என்றைக்கும் கடினமாகப் பேசாத கணவன், அன்று அப்படிச் சொன்னதும், மறுபேச்சு பேசவில்லை உமா.

ஒரு பத்து தினங்கள் கடந்தன. சிவராத்திரி ஆரம்பமாக ஒரே வாரம் இருந்தது. பொம்மையை வாங்கலாம் என்று கணவன் சொல்வான், அல்லது 'திடு திப்'பென வாங்கிவந்து தன்னை மகிழ்விப்பான் என்று அவள் போற்றிய ஒரு அற்ப ஆசை அகன்றது.

'அதைப் பார்த்துக்கொண்டிருந்தாலே பசி தீர்ந்துபோகுமே! அந்தப் பொம்மை மண் என்று அவருக்குத் தோன்றிற்றே தவிர, அந்த முகத்திலே ஜீவனும் அழகும் அவருக்குப் புலனாகவில்லையே! அப்படி பார்க்கப்போனால், மனித உடலும் பிடி சாம்பல்தானே ஒரு நாளைக்கு! அவருக்கு அது தோன்றவில்லை! பொம்மையை வாங்கமாட்டார்!

இவ்வாறெண்ணி மனம் புழுங்கி வந்த உமாவுக்கு, நவராத்திரிக்குப் பிறந்தகப் பரிசாக ரூபாய் இருபத்தைந்து ஊரிலிருந்து வந்தது!

கரைகாணக் கூடாத சந்தோஷத்தில், நாலு வீடு தள்ளியிருந்த ராமையர் வீட்டு பதினான்கு வயதுப் பையன் பாபுவைத் துணை கூட்டிக்கொண்டு, திருவல்லிக்கேணி போய் வந்தாள் உமா. பதினைந்து ரூபாய்க்கு பெரிய கிருஷ்ணரையும், மற்றும் நான்கைந்து கண்ணன் பொம்மைகளையும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டாள். 'காணிங்க நர்த்தனன்', 'கோபாலகிருஷ்ணன்', 'பாலகோபாலன்', 'வெண்ணையுண்ணும் கண்ணன்', 'ராதாலோலன்' - இவற்றின் மத்தியிலே, தன்னுடைய நானாவித லீலைகளைப் பெருமிதத்துடன் நோக்குவது போலத் தோற்றமளித்து, 'வெளேர்' என்றிருந்து கண்ணைப் பறித்த கண்ணபிரானைப் பார்த்துப் பார்த்து உச்சிகுளிர்ந்தாள் உமா. தன் குழந்தையின் எல்லாவிதப் பருவங்களையும் நினைத்து மகிழும் தாயின் பெருமிதம் உமாவிடமும் காணப்பட்டது.

"இவ்வளவுக்கு மீறிவிட்டதா வெறி!" என்று கணவன் நிஷ்டூரமாக கேள்வி போட்டதைக் கேட்டுக்கொண்டாள் உமா. அவன் வாங்கமாட்டான், ஆனால் தனக்குப் பணம் வந்த உரிமையில் தான் வாங்கிவந்துவிட்டதையும் அவன் விரும்பமாட்டான், அவன் விரும்ப முடியாது, இயற்கைதான்! ஆனால் தன் ஆசை? உமா பதில் பேசாததால், அவனும் அதிகம் பேச முடியவில்லை. 'கிருஷ்ணர் குழாம்' வீற்றிருந்த மேஜை கூடத்தில் சிறப்புடன் விளங்கலாயிற்று. காலை மாலைகளில் விளக்கேற்றி, ஊதுவர்த்தி வைத்துப் பூ சாத்துவதெல்லாம், சுவாமி பீடத்திலிருந்து அந்த மேஜைக்கு வந்துவிட்டன.

"மீராவாகிவிடலாம் என்ற எண்ணமோ?" என்று கணவன் பின்னர் ஒரு நாள் கேட்டபொழுது அவளுக்கு அதன் உட்கருத்து விளங்கவில்லை!

"அந்த வேணுகோபாலனை நினைத்து இந்த ஆட்டம்பாட்டமெல்லாம் அமர்க்களப்படுத்துகிறாயோ?" என்று அடுத்து ஒரு நாள் சங்கரன் வினவியபொழுது தான் துணுக்குற்றாள் உமா.

"ஐயோ, இதென்ன விபரீதம்? இவர் என்னமோ எண்ணவாரம்பித்துவிட்டாரே!" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள் உமா.

"உமா, அந்த வேணுகோபாலன் என்ற பையன் மீது உனக்கு சிறிது நாட்டம்தானே! கோத்திரம் ஒன்றாகிவிட்டது என்று கடைசியில் தெரிந்து கைவிடப்பட்ட சம்பந்தம் தானே அது! அதனால் உன் மனசு மாறிவிடுமா என்று எனக்குத் தோன்றுகிறது!" என்று சங்கரன் தன்னைத் தலை தீபாவளியின்போது கேட்டிருக்கிறான்!

"அதற்கென்ன இப்போது! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! உமாவுக்குக் கணவர் நீங்கள்தான் ஆக முடியும், உங்கள் பெயரே சொல்லும்! அவர் எனக்கு அண்ணாவென்று கூறும் அவருடைய பெயர்!" என்று சமாதானம் கூறியிருக்கிறாள் உமா, கணவனுக்கு.

மனதின் போக்கே விசித்திரம்தான்!

கணவனுடன் ஐந்து வருடம் இல்லறம் நடத்திய அவள் மனதில் அந்த பழைய பிரமை எழுமா? 'எழுந்துவிட்டது பிரமை,' என்று கணவன் இத்தனை பழக்கத்திற்கப்புறம் நினைக்கிறான்! ஐந்து வருஷ இல்லற வாழ்வின் பயனாக, பெண் மனத்தின் ஆசாபாசங்கள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று அவன் உணரவில்லை. தங்கள் இருவரையும் பிணைக்கும் குறைதான் அது. ஆனால் அவள் பெண்; முதலில் உணர்ந்தாள். அதை அவனிடம் வெளியிடவும் கஷ்டம்!

'குழந்தைகள் பிறக்காதிருக்கும் வரை க்ஷேமம்!' என்று மனப்பூர்வமாக நினைத்த அவள் அப்படியே பிறரிடமும், கணவனிடமும் கூறியிருக்கிறாள்! குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் தனக்குண்டாகிவிட்டதைத் துணிந்து அவள் எப்படிச் சொல்வாள்?

சொல்ல முடியாமல், மெல்லவும் முடியாமல், உமா தவித்தாள். உண்மை உணராத கணவன், அவளைத் தாக்கியே பேசி வந்தான். நிலைமை மோசமாகி வந்தது.

குழந்தைக் கண்ணனைக் அவள் பேணி வந்தபோது சிறிதும் குற்றங்காண கணவன், 'மாப்பிள்ளை கிருஷ்ணரை வீட்டிற்குக் கொணர்ந்ததும் குற்றங் கூறத் தொடங்கியதால், அவன் மீது குற்றம் இல்லை என்று நினைத்த உமா, பணிவும் பொறுமையும் கொண்டுதான் இருந்தாள்.

அவன் அவ்வாறு எண்ணுவதை அவள் விரும்பவில்லை, ஆனால் தவிர்க்கவும் இயலவில்லை. கண்ணனின் அருளோ, தம்பதிகளின் கூற்று கொண்ட மகிமையோ, அவளுடைய ஆர்வத்தின் சிறப்போ, அவளுடைய ஆசை நிறைவேறும் அறிகுறி காணப்பட்டது.

"கிருஷ்ண விக்கிரகம் மாதிரி என்பார்களே, அதுபோல பிள்ளை வேண்டுமென்றுதான், எனக்கு கண்ணன் வெறி வந்தது!" என்றாள் உமா, சிரித்துக் கொண்டே, கணவனுக்குச் சங்கதி சொல்லுகையில்.

"அதனாலே, வேணுகோபாலன் என்று பெயர் வைத்துவிடு, அவனுடைய ஞாபகமாகவும் இருக்கும்!" என்று புருஷன் எகத்தாளமாக அப்போது கூறவேதான், அவன் மனது எத்தனை தூரம் அந்த எண்ணத்தின் ஆட்சியிலே அழுங்கியிருந்ததோ புலனாயிற்று உமாவுக்கு.

'என் ஆசையை நிறைவேற்ற முன் வந்தாய்! ஆனால் முன்பு நான் பிள்ளை வேண்டும் என்று வேண்டிக் கொண்டதை மட்டும் நிறைவேற்றிவிடாதே கண்ணா! பெண்ணே பிறக்குமாறு அருள் செய்! என் இன்ப வாழ்வு குலைந்துவிட வேண்டாம்!' என்று அன்றே உமா பகவானை வேண்டிக் கொண்டாள்.

"என் எண்ணம் எப்பொழுதோ மாறியிருந்தது, சுந்தரி!" என்று உமா சொல்லிக் கொள்ளவில்லை!

'ஸ்வராஜ்ய லக்ஷ்மி' தன்னை அடக்கிவிட்டுத்தான் பிறந்திருக்கிறாள் என்பதிலே தலையிறக்கமா அவளுக்கு? பெருமைதானே! இப்போது உமாவின் உள்ளம் தாயுள்ளம் அன்றோ?

**********

(சிறுகதை, அக்டோபர் 15,1947)